ஆங்கில மருந்துவகைகள்
குழந்தைகளுக்கான
பால்மா வகைகளுக்கு
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(எமக்கு வேறு கிளைகள்
இல்லை)
(33078)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அன்பளிப்பு
மற்றும்
சகலவிதமான
பொருள்களுக்கும்
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(எமக்கு வேறு கிளைகள்
இல்லை) (33078)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 01 செவ்வாய்க்கிழமை (18 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 328

# பூநகரிப்பாதையை திறத்தல்; யுத்தநிறுத்தம்

# ஸ்ரீலங்கா அரசு தீவிரமாக ஆலோசிக்கின்றது!

## சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 18

★ கேரதீவு - சங்குப்பிட்டி ஊடான போக்குவரத்துப் பாதையை திறத்தல்.

★ யுத்த நிறுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தல்.

- இந்த இரு விடயங்கள் குறித்தும் அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்க நேற்று அறிவித்தார்.

பூநகரிப் பாதையைத் திறப்பதாயின் அங்குள்ள பூநகரி, இராணுவ முகாமை வேறு இடத்துக்கு மாற்றுவது குறித்து சிந்திக்க வேண்டிவரும் என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் செய்தியாளர்களுக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே பிரதமர் சந்திரிகா இந்த அறிவிப்பை விடுத்தார்.

விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசின் பிரதிநிதிகள் முதலாவது கட்டப் பேச்சுக்களை நடத்திய பின்னர், பிரதமர் சந்திரிகா செய்தியாளர்களுக்கு அளித்த முதலாவது பேட்டி இதுவாகும்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முற்பகல் நடந்த பேட்டி நிகழ்ச்சியில் பி.பி.ஸி. சிங்கள சேவையின் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ மற்றும் பி.பி.ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்வி உட்பட செய்தியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இப்பேட்டியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் போக்குக் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

''கடந்த தடவை பேச்சுக்களின் போது இடம்பெற்றது போல, வடக்குப் பிரதேசத்திலிருந்து விலகிவிட்டு பிறகு பெருவிலை கொடுத்து அதனைப் பிடிக்க வேண்டிய நிலை இம்முறை ஏற்படாது என்று இராணுவத்துக்கு உங்களால் உறுதி வழங்க முடியுமா?'' — என்று பிரதமரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறியதாவது:-

## இதுவரை நடந்த சமாதான முயற்சிகள் தோற்றதற்கு ராணுவமே காரணம்

ஆட்சியில் இருப்பது அரசு; இராணுவம் அல்ல.

சமாதானப் பேச்சுகள் மற்றும் அதன் இலக்கு, வேகம் ஆகியவற்றை நிர்ணயிப்பது அரசாங்கமே; படைகள் அல்ல.

ஏதோ காரணத்தினால் முன்னைய அரசினால் இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இராணுவம் மீது முன்னைய அரசுக்கு போதியளவு கட்டுப்பாடு இருக்கவில்லை.

இதுவே முன்னர் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்ததற்கு ஒரு காரணம்.

இராணுவம் மீது எங்களுக்கு முழுக்கட்டுப்பாடு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். தங்களுக்கு சரி எனப்பட்டதை அவர்கள் செய்வதற்கு அவர்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

## இப்போது சமாதான முயற்சிகளை படையினர் சிலர் குழப்பக்கூடும்

போர் நிறுத்தம் பற்றி சிந்திக்க நான் தயார். ஆனால் போர் நிறுத்தம் ஏற்படுவதை இராணுவம் அவ்வளவாக விரும்பவில்லை.

அதிலும் முக்கியமாக பேச்சுவார்த்தையின் ஆரம்பக் கட்டங்களில் போர் நிறுத்தம் ஏற்படுவதை பாதுகாப்புப் படைகள் விரும்பவில்லை.

ஆனால் ஆட்சியிலிருப்பது நமது அரசே அன்றி இராணுவம் அல்ல.

விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தும் வகையில் அவர்களைச் சீண்டுவதன் மூலம் சில இராணுவ அதிகாரிகள் சமாதான முயற்சிகளை நாசப்படுத்த முயற்சி செய்யக்கூடும் என நான் நம்புகிறேன்.

கேள்வி:- அப்படியானால் இராணுவத்தின் உயரதிகாரிகள் சண்டை தொடர்வதையே விரும்புகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:- இது குறித்து நான் கருத்துக் கூறக்கூடாது என நினைக்கிறேன்.

## பிரபாவை விரைவில் சந்திப்பேன்

அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம் பெற்ற முதலாவது கட்டப் பேச்சுக்கள் நல்லபடியாக நடந்தேறின.

யாழ்ப்பாணத்தில் அரச பிரதிநிதிகள் குழுவுக்கு கிடைத்த அமோக வரவேற்பு பெருமகிழ்ச்சியைத் தந்துள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை நான் விரைவில் சந்திக்கக் கூடும்.

## நாம் விட்டுக் கொடுக்க வேண்டி வரும்

கேள்வி:- ''யாழ்ப்பாண மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை நீக்கும் வகையில் — உணவு, மின்சாரம் போன்ற — அத்தியாவசிய சேவைகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் விடுதலைப் புலிகளிடமிருந்து கைமாறாக நீங்கள் பெரிதாக எதனைப் பெற்றுக்கொள்ளப் போகின்றீர்கள் என்று இங்கு பரவலாகக் கேட்கப்படுகின்றதே?''

பதில்:- சிங்கள மக்களில் சில தீவிரவாதிகளைத் தவிர ஏனையோர் எமது சமாதான முயற்சிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சமாதான முயற்சிகளை நாம் கட்டி வளர்ப்பது மக்களுக்கு மகிழ்வைத் தந்துள்ளது.

அரசுப் பிரதிநிதிகளுக்கு வடக்கில் வழங்கப்பட்ட வரவேற்பு குறித்தும் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுற்றுள்ளனர்.

இதற்குத் தெளிவான காரணங்கள் உள்ளன.

நாம் பெரிய அளவில் விட்டுக்கொடுத்து அமைதியைக் காணப்போவதாகக் கூறினோம். அதனாலேயே சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக கடந்த இரு தேர்தல்களிலும் மக்கள் வாக்களித்தனர். பொது தேர்தலில் மக்கள் அதனைத் தெளிவாகக் காட்டினர்.

அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டும் என்றால் பெரும்பான்மை இனச் சமூகம் பெருமளவு விட்டுக் கொடுக்க வேண்டி வரும்.



சந்திரிகா

### தொண்டா சந்திரிகாசந்திப்பு

கொழும்பு, ஒக். 18

இந்தியாவிலிருந்து திரும்பிய இ. தொ. கா. தலைவர் தொண்டமானும் பிரதமர் சந்திரிகாவும் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

### பென்சன் வவுச்சர்கள்

வடமராட்சி, ஒக். 18

நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த மாஹோ கப்பலில் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாதத்துக்கான (ஒக்டோபர்) பென்சன் வவுச்சர்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. அத்துடன் ஒருதொகுதி தேசிய அடையாள அட்டைகளும் வந்துள்ளன.

### தபால் பொதிகள் வந்தன

வடமராட்சி, ஒக். 18

நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்தடைந்த 'மாஹோ' கப்பலில் 435 தபால் பொதிகளும் எடுத்துவரப்பட்டன.

அந்தத் தபால் பொதிகள் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு நாளை புதன்கிழமை முதல் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

### தாழமுக்கம்

இலங்கையின் வட கிழக்குப் பகுதியின் தென் மேற்கு பிராந்தியத்தில் தாழமுக்கம் ஏற்பட்டிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக தற்போதுள்ள மழை காலநிலை மேலும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-4]

### மன்னாரில் பஞ்சம்?

கொழும்பு, ஒக். 18

மன்னாரில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும்—

மன்னார் அரச அதிபர் இது தொடர்பாக அபயக் குரல் எழுப்பியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-4)

### இன்று படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 18

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று [illegible] யல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## விடுதலைப் புலிகளுக்கு பேச்சில் நாட்டமுள்ளதாகத் தெரிகின்றது

கேள்வி:- விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பேச்சு மூலமான தீர்வை உண்மையில் விரும்புகிறார் என நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:- விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடமும் திரு. பிரபாகரனும் சிலவேளைகளில் அப்படி நினைத்திருக்கக்கூடும்.

உலகின் கடுரமான யுத்தப் பிரியர்கள்கூட சில சமயங்களில் பேச்சு மூலமான சமாதானத் தீர்வுக்கு வந்துள்ளார்கள். பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலியரும் இதற்கு உதாரணம்.

எமது பிரதிநிதிகள் வடக்கே சென்ற போது இளம் சமுதாயத்தினர் கூட அவர்களுக்கு கை கொடுத்து வரவேற்றனர்.

எனவே அவர்கள் அமைதியை விரும்புகிறார்கள் என்பதே அர்த்தம்.

தற்போதைக்கு விடுதலைப் புலிகள் பேச்சில் நாட்டம் உள்ளவர்களாகவே மேலெழுந்தவாரியாகத் தெரிகிறது. அதனால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறோம்.

சாதாரண மக்களின் மனங்களையும் இதயங்களையும் கவர்வதிலும்பார்க்க விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் இணக்கம் ஏற்படுத்திக்கொள்வது என்பது கடினம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் மக்களின் ஆதரவின்றி எந்த கெரில்லா இயக்கமும் இயங்க முடியாது; இருக்க முடியாது.

யாழ்ப்பாண மக்கள் ஆக்கபூர்வமாக சமாதானத்தை விரும்புவதால் திரு. பிரபாகரன் கூட மாறக்கூடும் என நான் நம்புகிறேன்.

## புலிகள் பேச்சுக்கு இணங்காவிடில் சாதாரண மக்களுடன் பேசுவோம்

கேள்வி:- அதாவது விடுதலைப்புலிகளை மக்களிடமிருந்து பிரிப்பதுதான் உங்கள் மூலோபாயமா?

பதில்:- இல்லை. யாரையும் யாரிடமிருந்து பிரிக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை. யாழ். மக்கள் அமைதியை விரும்புகிறார்கள் என்பதை நாம் அறிந்து கொண்டுள்ளோம். நாமும் சமாதானத்தையே விரும்புகிறோம். ஆகவே ஒரே சிந்தனை இருப்பதால் இரு சாராரும் இணங்கிப்போவது சாத்தியமே.

யாழ். மக்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். விடுதலைப் புலிகள் பேச விரும்பாவிடில் நாம் சாதாரண மக்களுடன் பேசுவோம்.

## இராணுவத்தின் இணக்கத்துடனேயே யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும்

இராணுவமும் இணங்கியே போர் நிறுத்தம் செய்ய வேண்டும்; யுத்த நிறுத்தப் பிரகடனம் எதிலும் இராணுவமும் சம்பந்தப்பட வேண்டும் — என்று புலிகள் விரும்புகின்றனர்

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் தீர்மானிக்கும் முடிவு எதனையும் இராணுவம் நாசப்படுத்த முடியும் என புலிகள் கருதுகின்றனர்.

போர் நிறுத்தம் பற்றிய முடிவு எதுவும் எடுக்கப்படுவதற்கு முன் போர் நிறுத்தம் பற்றிய நடைமுறை, வழிமுறைகள் பற்றி இராணுவ அதிகாரிகள் கலந்துரையாட வேண்டும்.

எந்தத் தரப்பினரும் போர் நிறுத்தத்தை நியாயமற்ற இராணுவ ஆதாயம் பெறுவதற்குப் பயன்படுத்தக் கூடாது.

## சாகரவர்த்தனா கப்பலை புலிகள் தகர்த்ததற்கும் காரணங்கள் உள்ளன

கேள்வி:- ''சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னர் கடற்படையின் மிகப் பெரிய பீரங்கிப் படகான சாகரவர்த்தனாவைத் தாக்கி மூழ்கடித்த அமைப்பு ஒன்றை பிரதமர் எப்படி நம்பமுடியும்?

பதில்:- கிழக்கில் விடுதலைப் புலிகளின் மிகச்சிறந்த போராளிகள் பலர் உயிரிழப்பதற்குக் காரணமான இராணுவத்தின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே கடற்படைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அரச தரப்புக் குழுவிடம் தெரிவித்தனர்.

இத்தகைய சம்பவங்கள், இராணுவ அதிகாரிகள் சிலர் சமாதான முயற்சிகளை நாசப்படுத்தக் கூடும் என்ற எச்சரிக்கையைத் தந்துள்ளன. — என்றார்.

### மனித புதைகுழிகள் தோண்டும் விவகாரம்:

## படையினரின் அதிருப்தியையிட்டு நாம் எதுவுமே செய்ய முடியாது!

கொழும்பு, ஒக். 18

''இராணுவத்தினரில் பெரும்பாலானவர்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள் என நாம் நம்பவில்லை. ஆனால் கடந்த காலத்தில் தவறுகளைச் செய்த சிலர் அதிருப்தி அடைந்திருக்கலாம். அதற்கு நாம் எதுவும் செய்யமுடியாது. நாங்கள் முழு நாட்டையுமே நிர்வகிக்கவேண்டி உள்ளது.''

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது பிரதமர் சந்திரிகா இதனைத் தெரிவித்தார்.

''மனித புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கைகள் படையினர் மத்தியில் புதிய அரசின் மீது அதிருப்தியை உருவாக்கலாம் அல்லவா?''— எனப் பத்திரிகையாளர்கள் கேட்டதற்குப் பதிலளிக்கையிலே பிரதமர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

செய்யப்பட்டுள்ள தவறுகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே மனித புதைகுழிகள் தோண்டப்படுகின்றன.

இத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது.

ஐ. தே. க. கடந்த 17 வருட காலமாக மக்களுக்குச் செய்த பணிகளை விடக் கூடுதலான சேவைகளை நாம் 6 வாரங்களில் மக்களுக்குச் செய்திருக்கிறோம். இதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

உலகிலேயே இத்தகைய வன்செயல் மிகுந்த அரசோ, பாதுகாப்புப் படைகளோ இல்லை எனக்கூறுமளவுக்கு தவறுகள் நடந்துள்ளன. அவற்றைச் செய்தவர்கள் யார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

—இவ்வாறு பிரதமர் தமது பதிலில் மேலும் தெரிவித்தார்.

(ஜ 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின கோழிகள், முட்டையிடும் சில்கி, பாமாஸ், பிறாமாஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில் பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (33385)

(23x16) நீள அகலம் உடைய தகரசெட், சிறிய பெரிய கட்டில்கள், பிரம்பு, குசன் செற்றிகள், கந்தோர் மேசை, பின்னல் செற்றி, கபேட், டிரெஸிங் ரேபிள் குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில் பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (33386)

கேர்(F)போம் பிறசியர்ஸ், சில்வர் சில்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல் எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், 303. காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (33334)

சிவம் தீபாவளி வாழ்த்து மடல் மற்றும் St. Micheal தீபாவளி நியூகலா வாழ்த்து மடல் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஸ்ரீகாந் புத்தக சாலை, யாழ்ப்பாணம், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9504)

## வீடு தேவை

நல்லூர் ஆனைப்பந்தி சந்தர்மடம் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 54/12, குறோசெற் லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (33361)

## தீபாவளி வாழ்த்து

புதிய டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள் [விற்பனையாகின்றது. ''ஆனந்த்ஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33364)

## கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 19-10-94 புதன் கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33323)

18-10-94 செவ்வாயும், புதனும் பிறிமா புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 42 ரூபா படியும் பிலிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா. தனிச் சிவப்பு இறைச்சிக் குஞ்சுகள் 35 ரூபா/- வெள்ளை சேவல் குஞ்சுகள் 12 ரூபா படியும் பெற்றுக் கொள்ளலாம். உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிங்கம் லேன், உடுவில். (7670)

## டில்கா வாச் வேக்ஸ்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்திக் கொள்ளவும், மணிக்கூடுகளை உதிரிப் பாகங்களுக்காக விற்றுக் கொள்ளவும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. கண்டி வீதி சாவகச்சேரி. தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி, வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9514)

## கலைஞர்கள் தேவை

பிரபல இசைக்குழுவுக்கு அனுபவம் பெற்ற பாடகர், தபேலர், லீட் - கிற்றார், பேஸ் - கிற்றார் இசைக்கலைஞர்களும் உதவியாளர்களும் தேவை. விவரங்களுக்கு 20 - 10 - 94ற்கு முன்னர் மாலை4-30—6-30க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்: இல. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33118)

## மலிவு விற்பனை

தரமான இலக்கிய நாவல், சிறுகதை, அரசியல், அறிவியல், பொது விடயங்கள் போன்ற இன்னும் பல நூல்கள் 30 வீத கழிவில் யாழ். இந்துக்கல்லூரி தமிழின்பக் கண்காட்சியில் விற்பனையாகின்றன. விற்பனையாளர் வசந்தம் புத்தக நிலையம். (33367)

## மணமக்களே!

உங்கள் திருமண அழைப்பிதழ்களை நீவிர் விரும்பும் டிசைன்களில் எண்ணம்போல் தெரிவு செய்திட உடன் வாரீர். ''ஆனந்த்ஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33366)

UNIVERSITY OF JAFFNA.

EXTERNAL REGISTRATION & EXAMINATION UNIT

**FIRST IN ARTS/FIRST IN COMMERCE (EXTERNAL) EXAMINATION 1993**

(EX E. S. L. I. 0)– English as a Second Language

The Subject English as a Second Language (EX. E. S. L. I. 0) for the First in Arts **First in Commerce** (External) Examination 1993 will take place on 25-10-94 Tuesday from 9-00 a.m. to 12-00 Noon.

Please note the change of time.

–REGISTRAR.

(C-9402)

# JAFFNA SCIENCE ASSOCIATION

A talk would be delivered by

**MR. S. RUTHIRALINGAM**

Chartered Civil Engineer

on

**"Locally Available Lime Based Cementious Materials"**

Date & Time: 19th October 1994, Wednesday at 3-30 p. m.

Venue: Physics Lecture Hall, Faculty of Science, University of Jaffna.

**ALL ARE WELCOME**

Secretary
Section B – Applied Science & Technology

[33388]

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
✶ சாவகச்சேரி தெய்வேந்திரா
ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

திரு. பொ. தாசனின்

# "இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி

[சி-9340]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் பரமநாதன் குசநாதன்

மலர்வு: 29 — 10 — 1982
உதிர்வு: 23 — 10 — 1991

திதி: 18 — 10 — 1994

வருடங்கள் மூன்று சென்று விட்டது குசநாதா! நின்மதி முகம் காணாத வேதனையில் திருடினான், எங்கள் அருமை செல்வத்தை ஷெல் வடிவில் வந்த காலன். எம் இதயமொன்று இருக்கும் வரை இனிய உன் நினைவுகள் ஆறாது! ஆறாது!!


உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பிமார், உறவினர்.

நாதன் களஞ்சியம்,
213 C மருத்துவமனை வீதி,
கிட்டுசாலை,
யாழ்ப்பாணம்.

67/42, சிவிலாசகம் வீதி,
தர்மலிங்கம் ஒழுங்கை,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(33279)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 13 — 12 — 1922
உதிர்வு: 18 — 09 — 1994

## அமரர் சின்னத்தம்பி வேலாயுதம்

18-09-94 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி அன்னாரது இல்லத்தில் இன்று நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி மக்கள்.

குடாரப்பு,
நாகர்கோவில்.

(33335)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## நிர்மலாதேவி அருமைராசா

தோற்றம்: 02 — 04 — 1949
மறைவு: 12 — 11 — 1989

திதி: 18 — 10 — 1994


அன்பும் பாசமும் நிறைந்த எங்கள் இதய தெய்வமே! எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு ஐந்தாண்டல்ல ஒரு யுகமே சென்றாலும் எம்முடன் நீ இருப்பாய். உன் உதிரத்தால் உதிர்ந்த மூன்று பூக்களில் உன் முகத்தைக் காண்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
அன்பின் அம்மா, கணவர்,
பிள்ளைகள், சகோதரர்கள்.

ஜெனார் டென்ஸ்,
இணுவில்.

[சி-5729]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி கனகம்மா

தோற்றம்: 28—11—1914
மறைவு: 18—09—1994

உங்கள் அன்பு எம்மைவிட்டு அகலாதவை. உங்கள் ஆசியும் அறிவுரையும் என்றும் எம்மை வழிநடத்தும். உங்கள் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்தும், அனுதாபங்கள் தெரிவித்தும், கண்ணீரஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், ஆறுதலளித்தும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்;
அன்புமக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

எரிக்கனேஷ்,
பொன்னையா லேன்
ஆனைக்கோட்டை.

(33391)

# இன்று காலை மத்திய கல்லூரிக்கு வாருங்கள்!

நீங்கள் இளைஞரா அல்லது மாணவரா?

நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்?
ஜீ.சீ.ஈ சாதாரண பரீட்சையில் சித்தி எய்தியவரா?

அல்லது

ஜீ. சீ. ஈ. சாதாரண தரத்தில் படிப்பவரா?
ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து வீட்டு தொழில் தேடுவோருக்கும் உயர்தரத்தில் பயில்வோருக்கும் இது பொருந்தும்.
எதிர் காலத்தில் நீங்கள் குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

எதுவானாலும் சரி

இவற்றில் எந்த வகையைச் சேர்ந்தாலும் ஒரு குறையுமில்லை...

யாழ். மத்திய கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 - 00 மணி முதல்

நடைபெறும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குக்கு வாருங்கள்.

உங்கள் கல்வித் தகைமையோடு ஈட்ட முடியாது என்று நீங்கள் கருதிக் கொண்டிருக்கும் வாழ்க்கைப் பெறுபேறுகளை வழி காட்டவே இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

நீங்களும், உங்கள் பெற்றோர் / பாதுகாவலரும் மேற்படி கருத்தரங்கில் கலந்து பயன் பெறுங்கள்.

**உங்கள் வளமான எதிர்காலத்துக்கு வழிகாட்டுவோம்.**

யாழ். றோட்டறிக் கழகம் நடத்தும்

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கில்

| | | | |
|---|---|---|---|
| கணக்கியல் | - (Accountancy) | முகாமைத்துவம் | - (Management) |
| கட்டடக்கலை | - (Architecture) | ஆசிரியம் | - (Teaching) |
| பொறியியல் | - (Engineering) | தொழில் நுட்பம் | - (Technical) |
| சட்டம் | - (Law) | தாதி | - (Nursing) |

முதலான துறைகளில்

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை,
திரு. இரா. சுந்தரலிங்கம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
திரு.கே. ஜெயரட்ணம் (தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்)
திரு. Rtn. மா.திருவாதவூரன் (உதவி நிதியாளர் யாழ்.பல்கலைக்கழகம்)
திரு ந. கனகரத்தினம் (தாதிய பரிபாலகர்)

ஆகியோர்

வழிகாட்டற் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்

✶ அனைவரும் வருக ✶

**Rtn. PP. P. செல்வநாதன்,**
தொழிற் சேவை இயக்குநர்,
Director. Vocational Service.

**Rtn. PHF. E. சரவணபவன்,**
தலைவர் 94/95,
President.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சமயோசிதம் வேண்டும்

அரசாங்கத்தை, பூரண போர் நிறுத்தம் ஒன்றை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருமாறு, ஸ்ரீலங்கா பௌத்த காங்கிரஸ் கேட்டிருக்கிறது.

போர் நிறுத்தத்தைக் கொண்டு வருமாறு, அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் இந்தக் கோரிக்கை முற்றிலும் எதிர்பார்க்காத ஒரு தரப்பிடம் இருந்து வந்திருக்கிறது. இதனைத் தக்கவாறு பயன்படுத்துவது அரசின் புத்திசாலித்தனத்தைப் பொறுத்தது.

தமிழர் விவகாரத்தைப் பொறுத்தளவில், வடக்கு-கிழக்குப் பிரச்சினை சம்பந்தமாக, பௌத்த காங்கிரஸ் எப்போதும் கடும்போக்குடையதாகவே இருந்து வந்திருக்கிறது. வடக்கு-கிழக்கில் கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் போர் நடந்து வருகிறது. பெரும் மனித அழிவுகளும், உடைமைச் சேதங்களும் இடம்பெற்று வருகின்றன. மனித அழிவுகள் தமிழர் தரப்பில் மட்டுமன்றி சிங்களவர் (அரச) தரப்பிலும் இடம் பெறுகின்றன.

எனினும், இந்த நான்கு வருடங்களாக ஸ்ரீலங்கா பௌத்த காங்கிரஸ் போரை நிறுத்துமாறு முந்திய அரசாங்கத்தை வலியுறுத்தியதாகத் தகவல் இல்லை. இத்தனைக்கும் பௌத்த காங்கிரஸ், தென்னிலங்கையில் அரசியல் — சமூகச் செல்வாக்குள்ள ஓர் அமைப்பு.

தமிழீழ விடுதலைப் புலிகளை வெல்ல வேண்டும்; அதுவரை போர் தொடர வேண்டும் என்பதே பௌத்த காங்கிரஸின் நிலைப்பாடாக இதுவரை இருந்தது.

எனவே, பிரஸ்தாப அமைப்பு இப்போது போர் நிறுத்தம் கொண்டு வருமாறு புதிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருப்பது திடீரென ஏற்பட்ட ஒரு மாற்றம் என்றே கருதப்பட வேண்டும். சிங்கள, பௌத்த வட்டாரங்களில் உண்டான திருப்பம் என்றும் கூறலாம்.

கடந்த பொதுத் தேர்தலில், சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள், இனவாதத்தை நிராகரித்ததையும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களித்ததையும் ஏற்றுக்கொண்டு அல்லது அங்கீகரித்து, காலத்தோடு ஒட்டியதாகத் தனது நிலையை பௌத்த காங்கிரஸ் மாற்றியிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் இராணுவத்தின் அனுமதியை, உடன்பாட்டைப் பெறுவதற்கு முயற்சிக்கிறது. போர் நிறுத்தம், போக்குவரத்துத் தடைநீக்கம் ஆகியன குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகாவும் அரச பிரதிநிதிகளாக யாழ்ப்பாணம் வந்து சென்ற அதிகாரிகளும் பேச்சு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இத்தருணத்தில் பௌத்த காங்கிரஸ் போர் நிறுத்தத்தை ஆதரிப்பது நல்ல சகுனமாகும். இந்த அமைப்பைப் பின்பற்றி, தெற்கில் வேறு சமூக, மத அமைப்புகளும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தினால், படையினர் தமது நிலைப்பாட்டை மாற்றி இது விடயத்தில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு நல்க உந்துவதாக அமையும்.

போரை நிறுத்துவதற்குப் படையினர் முட்டுக்கட்டையாக இருக்காமல் தடுப்பதற்கு, தெற்கில் உள்ள அரசியல், சமூக, மத அமைப்புகளைக் கொண்டு அதற்கு ஆதரவான கருத்தைத் திரட்டுவது நல்ல ஆயுதமாக அமையும்.

அரசு புத்திசாலித்தனத்துடன் நடந்துகொள்ள விரும்பினால் மேற்சொன்ன அமைப்புகளின் கருத்தைத் திரட்டி இராணுவத்துக்கு வெளியிலிருந்து ஓர் அழுத்தத்தைக் கொடுத்து அதனை தனது வழிக்குக்கொண்டுவரலாம். அவ்வாறு சமயோசிதமாக, சந்திரிகா அரசு செயற்படுமா?

# குவைத் நாட்டின் புதிய எல்லைகளை ஈராக் அரசு அங்கீகரிக்க வேண்டும்

## ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானம்

நியூயோர்க், ஒக். 18

குவைத்தின் புதிய எல்லைகளை ஈராக் அங்கீகரிக்க வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய மற்றும் இரு தீர்மானங்கள் வருமாறு:

★ ஈராக் தனது இராணுவத்தை குவைத் எல்லையில் இருந்து உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

★ இனி ஒரு போதும் குவைத் எல்லைகளில் ஈராக் படைகளைக் குவிக்கக் கூடாது.

இந்த மூன்று அம்சத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றியது மூலம் விரும்பிய நேரத்தில் குவைத் மீது நடவடிக்கை எடுக்கும் அங்கீகாரத்தை கிளின்ரன் நிர்வாகம் பெற்று விட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, ஈராக் நாடாளுமன்றம் நேற்றுக் கூட இருந்தது.

இதற்கிடையில் ஈராக் தொடர்ந்து ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதற்கு பலாத்காரம் மூலமே பதிலடி வழங்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் எச்சரித்துள்ளார். (இ)

## யாழ். றோட்டறிக்கழகம் நடத்தும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று நிகழும்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். றோட்டறிக் கழகம் நடத்தும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

கருத்தரங்கில் கணக்கியல், கட்டடக் கலை, பொறியியல், சட்டம், முகாமைத்துவம், ஆசிரியம், தொழில்நுட்பம், தாதி முதலான துறைகளில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. கே. ஜெயரட்ணம், யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் றோட்டேறியன் திரு. மா. திருவாதவூரன், தாதியர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த திரு. க. கனகரத்தினம் ஆகியோர் வழிகாட்டற் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மாணவரும் பெற்றோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

## யாழ்ப்பாணத்துக்கு கப்பல் கட்டணம் இன்றி பொருள்கள் வரவேண்டும்

### கூட்டுறவு சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்பாணம், ஒக். 18

"பாதை திறக்கப்படும் வரை கப்பல் கட்டணம் இல்லாமல் அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர அனுமதிக்க வேண்டும்"

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் திரு வை. செந்தில்நாதன் பிரதமர் சந்திரிகாவுக்கும் மின்சக்தி எரிபொருள் பாதுகாப்புத் துறைத் துணை அமைச்சர், புனர்வாழ்வு புனர்நிர்மாண கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள் அமைச்சர் ஆகியோருக்கும் தனித்தனியாக அனுப்பிய கடிதம் ஒன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

★ கூட்டுறவு மொத்தஸ்தாபனமும் உணவுத் திணைக்களத்தின் களஞ்சியமும் முன்பு யாழ்ப்பாணத்தில் இயங்கியதைப் போன்று மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ கடல் தடைச்சட்டத்தினால் கடற்றொழிலாளர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இச்சட்டத்தை நீக்கினால் இவர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

★ இடம் பெயர்ந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு ராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட இழப்புகளை வழங்க வேண்டும்.

★ யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிளையைத் திறந்து மீள இயங்க வைத்து எரிபொருள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். (க-4)

## திருக்கோவிலில் மக்கள் மீளக்குடியமர அச்சம்

திருகோணமலை, ஒக். 18

திருகோணமலை திருக்கோயில் பகுதியில் பல வீடுகளில் சிறீலங்கா படையினர் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளதால் மீளக் குடியமர முடியாது அப்பகுதி மக்கள் பலர் கஷ்டப்படுகின்றனர் என அறிய வருகின்றது.

திருக்கோவில் பகுதியில் இருந்து 1990களில் சிறீலங்கா அரச படையினரின் நடவடிக்கைகள் மற்றும் சிங்கள, முஸ்லிம்களின் வன்முறை நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அப்பகுதிகளில் மீளக் குடியமருமாறு அரசாங்கம் வற்புறுத்தி வருகின்றது.

ஆனால் பல வீடுகளில் முகாம் அமைத்து தங்கியுள்ள சிறீலங்கா படையினர் குறித்து அரசாங்கம் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. இதனால் அவ்வீடுகளிலும் சூழவுள்ள பகுதிகளிலும் மீளக் குடியமர தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர். (க-4)

## சூழலைப் பாதுகாக்க அணி திரள்வோம்!

### பொருண்மிய நிறுவனம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

எமது தேசத்தின் சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாக எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நடத்தப்படவிருக்கும் கொடிவாரத்தில் பங்குபற்றி சூழலைப் பாதுகாக்க ஒரே கொடியின் கீழ் அணிதிரள்வோம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில்—

"சூழல் மாசடைதல்", "சூழல் பாதுகாப்பு" ஆகிய இரு வார்த்தைகளும் இன்று உலக நாடுகளில் மிகவும் பரபரப்பாகப் பேசப்படுகின்றன. அந்தளவுக்கு உலக நாடுகளினது வளங்களை உறிஞ்சி ஏப்பம்விடும் பூதாகாரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சூழல் பிரச்சினையானது எமது தேசத்தில் இதுவரை பாரிய அளவான தாக்கங்கள் எதையும் ஏற்படுத்தவில்லை. எனினும் இன்று பல்வேறு நெருக்கடிகளாலும், தேவைகளாலும் அளவுக்கதிகமான மரங்கள் அழிக்கப்படுகின்றமையால் இது எதிர்கால சூழலை பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

எனவே அழிக்கப்படும் மரங்களுக்குப்பதிலாக மீள் மரம் நடுகை செய்வதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய மரநடுகைத் திட்டங்களில் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்காக வடதமிழீழம் தழுவிய ரீதியில் கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

தமிழீழத்தின் இம்மரநடுகைக்கு ஏற்ற காலமான ஐப்பசி மாதத்தில் மரம்நடுகையினை தூண்டிவிடும் நோக்கில் இம்மாதத்திலே இச்செயற்பாட்டை மேற்கொள்வது சிறப்பாக அமையும் என்பதாலும் இவ்வாரத்தில் மூன்று லட்சம் கொடிகளை விநியோகித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் கொடிகளைப் பெற்று ஆடைகளில்அணிந்து அவ்வாரத்தை அனுஷ்டிக்க ஒத்துழைப்பு நல்குவதுடன் ஒவ்வொருவரும் தலா ஒரு மரக்கன்றுகளையாவது நடுகை செய்து எமது தேசத்தின் வளமான மண்ணைப் பாதுகாக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## புலிகளின் குரல் வானொலியில்

### 18 — 10 — 1994

### செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா? - "உயர் இரத்த வியாதியினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும் அவற்றைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகளும்" — வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் வழங்குவார்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய "குறியீடு"
- ★ 8-50 — களமும் கானமும் - க. சிவராசா எழுதிய "அதிர்ந்தது கடல்"

### 19— 10 — 1994

### புதன் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## நக்கீரனின் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 18

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவனாவ செல்வன் குணராஜா நக்கீரனின் இசை அரங்கேற்றம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

"ஸ்வரராக லய வினோத சுரபி" சங்கீத பூஷணம் திலக்நாயகம் போலின் மாணவனாவ நக்கீரன் புல்லாங்குழல் வாசிப்பதிலும் திறமையுள்ளவர். திரு. திலகநாயகம் போலிடம் குரு—சிட முறையில் கர்நாடக இசை பயின்ற நக்கீரன், அவரது பிரதம சிடனாவார், திரு. போலிடம் பயின்று அரங்கேற்றம் நடத்தும் முதலாவது மாணவரும் இவரே.

நாளை மாலை 4 மணிக்கு, நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும் நக்கீரனின் இசை அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன் தலைமை வகிப்பார். நாதஸ்வர வித்துவான், கலாசூரி என். கே. பத்மநாதன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கணேசானந்த மகா தேவா சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ ... நிகழ்த்துவார். (அ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்.மாவட்ட சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா சிறார்களுக்கானவிளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

விழாவை ஒட்டிய ஒத்திகை விழா இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும். (ஐ-ஒ)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஒக். 18

சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான செப்டெம்பர் மாதச் சம்பளம் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவிருப்பதாக சிமெந்துக் கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## நிவாரண விநியோகம்

ஊர்காவற்றுறை, ப.நோ.கூ. சங்கப் பாவனையாளர்களின் ஆவணி மாதத்துக்குரிய— 18 A, 18 B, முத்திரைக்குரிய — நிவாரண விநியோகம் கடந்த ஞாயிறு முதல் இடம்பெற்று வருகிறது. மேற்படி 4 கட்டங்களுக்குமான நிவாரணப் பொருள்களை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இசைத்திறமை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள மேலைத்தேய இசைத் திறமைகாண் போட்டி இன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை முதல் அமர்வாகவும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை இரண்டாவது அமர்வாகவும் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும்

யாழ். வை. எம். சீ. ஏ. தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் வண. பிதா மரியசேவியர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கடந்த 15 ஆம் திகதி வை. எம். சீ. ஏ. நடத்திய கீழைத்தேய இசைத் திறமைகாண் போட்டியின் போது பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சபா ஜெயராஜாவும், திருமதி ஜெயராஜாவும் கலந்து கொண்டனர். (உ)

## அதிபர் சேவை வினைத்திறன் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கை அதிபர் சேவை தரம் I, II, III உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது

இப்பரீட்சை முன்னர் நடைபெறவிருந்து பின் பிற்போடப்பட்டிருந்தது. (ஐ-3)

## நான்கு வார நிவாரணம்

யாழ்ப்பாணம், ஒக். 18

வேலணை ப. நோ. கூ. சங்கம் ஆவணி மாதத்திற்குரிய நான்கு வார பொருள்களை பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ள வசதியாக சனி, ஞாயிறு தினங்களில் கிளைகளைத் திறப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சகல பொருள்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

## வெள்ளைபிரம்புதினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 18

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

மாவட்ட லியோ கழகங்களும் லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடத்தும் இவ்விழாவையொட்டி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து யாழ். மத்திய கல்லூரிக்கு ஊர்வலம் ஒன்றை விழிப்புலனற்றோர் நடத்துவர்.

லியோஸ் – லயன்ஸ் மாவட்டத் தலைவர் திரு. எஸ் தங்கராஜா தலைமையில் நடக்கும் இவ்விழாவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ் அலுவலக பிரதிநிதி செல்வி. மேரி பேர்கின்ஸ் பிரதம விருந்தினராகவும், யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் செல்வி. ந. கனகரத்தினம், லயன்ஸ் பிராந்திய தலைவர் திரு. சே. இராஜேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (ஐ-3)

## தமிழின்பக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவரும் தமிழின்பக் கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும்.

கண்காட்சியில் இடம் பெறும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்ச்சியில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு "ஈழத்துத் தமிழ் நாடகப் பாரம்பரியம்" என்ற தலைப்பில் நாடகக் கலைஞர்களுடனான கலந்துரையாடல் இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சிகளில் 6.30 மணிக்கு பரிசளிப்பும் கௌரவிப்பும் நடைபெறும். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழக ஆதரவில் புதுவை அன்பனின் "சதியை வென்ற சாவுகள்" என்னும் நாடகம் இடம்பெறும். (ஐ)

## 8 ஆயிரம்பரல்ம.எண்ணெய் மற்றும் 12 ஆயிரம் பக்கெட்சிமெந்து மாஹோவில்வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 18

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டன.

இக்கப்பலில் புனர்வாழ்வுப் பிரிவுக்கு 8 ஆயிரம் பரல் மண்ணெய், 10 ஆயிரம் பக்கெட் சிமெந்து ஆகியவையும் தனியாருக்கு 2 ஆயிரம் பக்கெட் சிமெந்தும் மற்றும் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலின் மேல் தளத்தில் இருந்த சிமெந்து பக்கெட்டுக்களை இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின. (ஐ-3-173)

## ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் சிமெந்து விநியோகம்

நேற்றுக் கப்பலில் எடுத்து வரப்பட்ட சிமெந்தில் ஒரு பகுதி ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்களில் ஏற்கனவே பணம் செலுத்திய பன்னிரண்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு மட்டும் சிமெந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் வந்துள்ள சிமெந்தில் ஆயிரம் "பைக்கட்" சிமெந்து பாடசாலை திருத்த வேலைகளுக்கும்—

மற்றுமொரு தொகுதி அகதிமுகாம்கள் புனரமைப்புக்கும் வழங்கப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மாவுடன் 'ஹெந்தல' கப்பல் இன்று பருத்தித்துறைவரும்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். குடாநாட்டில் தற்சமயம் மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு இன்னும் ஓரிரு தினங்களுக்குள் நீங்கி விடும் என யாழ். செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

திருமலைத் துறைமுகத்தில் இருந்து மாவினை ஏற்றிக் கொண்டு கொழும்பு செல்லவிருந்த "ஹெந்தல" கப்பல் வடக்கே மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்காத வகையில் பருத்தித்துறைக்கு திருப்பப்பட்டிருப்பதாகவும், அந்தக்கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

பருத்தித்துறையில் இருந்து நேற்று முன்தினம் திருமலைக்குப் புறப்பட்ட "கோமாரி" கப்பல் அங்கிருந்து 3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவினை ஏற்றிக்கொண்டு இன்னும் மூன்று நாட்களில் இங்கு வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## இன்று

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் உள்ள வேதாந்த மடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சி. சரவணபவன் (சிற்பி) "விதிப்பவனும் விதிப்பயனும்"எனும் பொருளில் உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

சென். ஜோண்ஸ் அம்புலன்ஸ் படையின் சாவகச்சேரி பிரிவின் நான்காம்ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் இரத்த அழுத்த பரிசோதனை இன்று (செவ்வாய்) காலை 7மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை முதலுதவிப் பிரிவில் நடைபெறவுள்ளது. (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி இசை ஆசிரியர்களால் நடத்தப்படும் மாதாந்த பௌர்ணமி நாள் இசை நிகழ்ச்சி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு இடம்பெறும் இந்த இசை நிகழ்வில் திருமதி பாரதி சிவயோகநாதனின் மாணவிகளது நடன நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (உ-31)

★ ★ ★

கலாநிதி நா. ஞானகுமாரன் எழுதிய "சைவ சித்தாந்தத் தெளிவு"என்னும் நூல்வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும். (க)

## ஆசிரியர்களுக்கு அழைப்பு

கிளிநொச்சியில் வார இறுதியில் நடைபெறவுள்ள வட தமிழீழ தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் இடம் பெறவுள்ள கலை நிகழ்ச்சிகளைத் தயாரிக்க, அதற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் அனைவரையும் நாளை [புதன்] முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் கூடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்க வாத்திய ஒழுங்குகள், பிரயாண ஏற்பாடு என்பன குறித்து அங்கு கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ)

## பட்டதாரி சேவைக்கு தெரிவு

பட்டதாரிகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ்—

பயிற்சியளிப்பதற்குத் தெரிவு செய்வதற்காக வடக்கு, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரிடம் சமுகம் தரவேண்டும் என கடிதம் மூலம் கோரப்பட்டவர்களை-

நாளை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயம் I இன் அலுவலகத்துக்கு தவறாது சமுகம் தரும்படி வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கல்விச் சேவைச் சபையால் வழங்கப்பட்ட கடிதம், அடையாள அட்டை, பட்டதாரி கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றையும் எடுத்து வருமாறு கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி போட்டியும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு எதிராக விளையாடும்.

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம்பிள்ளை தண்டியாநாச்சியார் (காரைநகர்)

காரைநகர் சிவன்கோயிலடியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை தண்டியாநாச்சியார், காரைநகரில் காலமானார்.

இவர் சுந்தரேஸ்வரி, கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கயர்க்கரசியின் அன்பு மைத்துனியும் ஆவார். இல. 9, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு இல்லத்தில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொளவும்.

தகவல்;
சு. கருணாகரன்
(தம்பி)
(33395)

## நமசிவாயம் வேலுப்பிள் ளை

பலாலியை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது சுன்னாகத்தில் வசித்த நமசிவாயம் வேலுப்பிள்ளை (முன்னை நாள் தபால் திணைக்கள கணக்குப் பரிசோதகர்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (ஆனைக்கோட்டை) அன்புக்கணவரும், தியாகராசா, நடராசா, மங்களேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, பூலோகசேகரம், மைக்கல்பெக்வித் ஆகியோரின் அருமை மாமனாரும், தணிகா, வித்தகா, நளாயினி கிருஷ்ணவேணி, உஷா நந்தினி, அனுஷா, அன்ரு, றோசன், அனித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-10-94) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. பூலோகசேகரம்
(மருமகன்)

அப்பாத்துரை இல்லம்
வெளிப்புலம்,
புகையிரதநிலைய அருகில்,
சுன்னாகம், (7673)

## நன்னித்தம்பி வீரசிங்கம்

குப்பிழானைச் சேர்ந்த நன்னித்தம்பி வீரசிங்கம் காலமாகிவிட்டார்.

இவர், தையல்முத்துவின் அன்புக் கணவரும், திருமதி தேவராசா புஸ்பராணி (சுவிற்சலாந்து), வடிவேல் (சுவிற்சலாந்து), விக்கினேஸ்வரன் (சுவிற்சலாந்து), திருமதி சிறிஸ்கந்தராசா கலாமதி, திருமதி சுதாகரன் உமாதேவி, திருமதி குமாரசாமி இராசேஸ்வரி, திருமதி ஜெயக்குமார் நகுலேஸ்வரி(சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் வடக்கில் 18-10-94 செவ்வாயன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி தையல்முத்து வீரசிங்கம்
உரும்பிராய் வடக்கு, (33399)

## செல்வி. கந்தையா மங்கையர்க்கரசி

(முன்னாள் கிராமிய வங்கி முகாமையாளர்)

ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையை பிறப்பிடமாக கொண்ட செல்வி. கந்தையா மங்கையர்க்கரசி 14-10-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா – ஆச்சிமுத்துவின் அன்பு மகளும், திருமதி இ. கமலாதேவி, திருமதி ந. சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு அலுவலர்), திருமதி இ. சிவயோகம், சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இரட்ணசிங்கம், நவரட்ணம் ஆகியோரின், அன்பு மைத்துனியும் காண்டீபன், தாரணி, ஆனந்தி, செங்கை ஆழியன், அகிலன், அகல்யா, சஞ்சை, ராஜீவ் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் பிரபாகரன், (கில்டன்), கணேசலிங்கம் (கிராம அலுவலர்), திருமதி துர்க்கா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் வைஷ்ணவி பிரியாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
இ. செங்கைஆழியன்
(பெறாமகன்)

271/2, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (33397)

# வடமராட்சி கடலில் கடற்படை தாக்கு! மீனவர் இருவர் கொல்லப்பட்டனர்!!

## கட்டிப்பிடித்த நிலையில் இருவரதும் சடலங்கள் மீட்பு

வடமராட்சி, ஒக். 18
வடமராட்சி கடற்பகுதியில் நேற்று முன் தினம் இரவு பதினொரு மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கத்கோவளம் அகதி முகாமில் வசித்து வந்த சிவகவிராசா வரதன் (வயது 18) இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசா சிவசோதி (வயது 33) ஆகிய இரு மீனவர்களுமே உயிரிழந்தவர்களாவர்.

ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்த நிலையில் இவர்கள் இருவரது சடலங்களும் நேற்றுப் பகல் கடலில் இருந்து மீனவர்களால் மீட்கப்பட்டன.

கட்டுமரத்தில் கிடந்த இவர்களது சடலங்களில் பீரங்கித் தாக்குதலால் உண்டான வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெற்றிலைக்கேணி பகுதியிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற கடற்படையினரே கற்கோவளம் கடலில் வைத்து மீனவர் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இச்சம்பவத்தின் போது தொழிலில் ஈடுபட்டிருந்த ஏனைய மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்தனர்.

(ஜ-17 3)

## யாழ். நூலக எரிப்புக்கு தெற்கில் முக்கியத்துவம்

### காமினி மீதுசேறு பூசும் திட்டமாம்

கொழும்பு, ஒக். 18
யாழ். பொது நூலக எரிப்புக் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்பதை வெளிப்படுத்தும் செய்திகள் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள லேக் ஹவுஸ் மற்றும் ''ஐலண்ட்'' பத்திரிகைகளில் நேற்று பிரசுரிக்கப்பட்டிருந்தன.

யாழ். பொது நூலகத்தின் தற்போதைய தோற்றத்தை காட்டும் படங்களையும் இப் பத்திரிகைகள் வெளியிட்டன.

யாழ். பொது நூல் நிலையம் மீண்டும் நிறுவப்படும் என்றும் பத்திரிகைச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதன் பின்னணியில் அப்போதைய ஐ. தே. க அரசின் அமைச்சரும் தற்போது ஐ. தே. கவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான காமினி திஸநாயக்கா இருந்தார் என்று கூறப்படுவது தெரிந்ததே.

தற்போதைய சூழலில் யாழ். பொது நூலக எரிப்பு குறித்து தெற்கில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவது காமினியின் செல்வாக்கை பெரிதும் பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## யாழ். வாக்காளர்களின் அட்டைகள் தயாரிப்பு

யாழ்ப்பாணம். ஒக் 18
யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகள் திருகோணமலையில் வைத்து தற்போது எழுதப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்திலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் —

அதனை நடத்துவதற்கு ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே வாக்காளர் அட்டைகளில் பெயர், விலாசம் மற்றும் வாக்களிப்பு நிலையம் ஆகியவற்றை பதியும் வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## கராத்தே சுற்றுப்போட்டி

### போஸ்கோ ஆதரவில்

யாழ். மிட் - ரவுண் றோற்ரறக் கழகம் நடத்தவுள்ளது

பங்குகொள்ள விரும்பும் கராத்தே வீரர்கள் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை உங்கள் போதனாசிரியரிடமே பெற்று ஒப்படைக்கவும்.

1994 நவம்பர் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் காலை 8.00 மணிக்கு இளம்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் 1 ஆம், 2 ஆம் சுற்றுக்கள் ஆரம்பமாகும்.

அரைஇறுதி, இறுதியாட்டங்கள் யாழ். பல்கலைக் கழக முன் மைதானத்தில் நவம்பர் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் மாலை 6.00 மணிக்கு மின் ஒளியில் ஆரம்பமாகும்.

திட்டஇயக்குநர்
**J. M. R. C.**
(சி/9404)

## கவறிங் சேவை

அடையாள அட்டை (I C), வாகனவரி அட்டை (Tax) மற்றும் ஆவணங்கள் சகல அளவுகளிலும் கவறிங் செய்து கொள்ள நாடுங்கள்.

சன்லைட்-
றைக்கிளீனேர்ஸ்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்,
(சி-9401)

# காவேரியின்

## மாபெரும் மலிவு விற்பனை வாரம்

எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்

முதல் தெரிவுக்கு முந்திக்கொள்ளுங்கள்

தீபாவளி, புத்தாண்டை முன்னிட்டு அனைத்து ஐவுளிகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன.
இச் சலுகை 23ஆம் திகதி வரை மட்டுமே

★ மாபெரும் மலிவு விற்பனை ★

காவேரி பட்டுச் சோலை,
48, மேஜர் சோதியா தெரு, யாழ்ப்பாணம்.
(33393)

## மூதூரில் வீரச்சாவு

திருகோணமலை, ஒக். 18
மூதூர் நிலாப்பொல பகுதியில் நேற்று நண்பகல் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கப்டன் சின்னத்தம்பி அல்லல் புவிராஜ் என்றழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த மாதவராசா வசந்தராஜன் என்ற போராளியே வீரச்சாவடைந்தார்.

# G. S. லிங்கநாதன் அன் கோ

மலரும் தீபாவளியை மங்களமாய் கொண்டாட
மனநிறைவோடு அழைக்கின்றோம்.
கண்ணைக்கவரும் வகையில்
புத்தம் புதிய புடைவை தினுசுகள்

- ✶ காஞ்சிபுரம், வர்ணாசி, பெனாரிஸ், மீனாசத்றின்
- ✶ மைசூர் சில்க், கெஷ்மீர் சில்க், ஹைதராபாத் சில்க், ட்றோ சில்க்
- ✶ பூணம் சாறி, மைக்குறோ ஷிபொன், எயர் போட், சூரத் சில்க், அப்பிள் சில்க்
- ✶ பிரியங்கா கொட்டன், பெங்கால் கொட்டன், காஞ்சி கொட்டன், சுங்குடி கொட்டன்
- ✶ பட்டுவேட்டி, சேட்டிங், சூட்டிங் சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்தையும் தெரிவுசெய்து கொள்ள
இன்றே நாடுங்கள்

## ச. லிங்கநாதன் வண்ணச்சோலை

13 — 14 (பெரியகடை வீதி)
சோதியா தெரு யாழ்ப்பாணம்.
(33396)

## 45-ம் நாள் நினைவலைகள்



அமரர் கிருஷ்ணர் வரதராஜா
(வவி)

மலர்வு: 05—05—1962
உதிர்வு: 04—09—1994

குடும்பத்தின் குல விளக்கே!
குன்றாத மணி விளக்கே!
அன்பின் சிகரமே!
பண்பின் உறைவிடமே
திரைகடல் ஓடியே
திரவியம் தேடிட
இடம் கொண்ட கிருஷ்ணாவே!
வரமாய் வந்துதித்த வரதராஜாவே!
வள்ளலே வள்ளலிற் சிறந்த எம் செல்வமே!

உன் செய்தி கேட்டதும் துடித்தோம்
கண்ணீர் வடியத் தவித்தோம்
மணவாழ்வு கண்டு மகிழும் நேரத்தில்-உம்
இறுதி வாழ்வு முடிந்து விட்டதே!
கனடாவில் உம் காலம் ஓடோடி
மறைந்து விட்டதே!- எங்கள்
அன்புச் சகோதரனே!
கண்கெட்ட காலனும்
கண்ணின்றி வந்தானோ?
சோதனை சூழ்ந்தாலும்
சாந்தி உன் ஆத்மாக்கே!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்மா, சகோதரர்.
மைத்துனர், மைத்துனி.

சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு. (33390)

மீண்டும் சமூகத்துக்கு உதவ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## மனதில் பாதிப்புற்ற சிறுவர்களின் (ARK - உடுவில்) வளர்ச்சி நிதிக்காக

★ சுண்டிக்குளி, புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய இளைஞர் குழுமம் ★

நடத்தும்

## ராஜன்ஸ் ★ இன்னிசை கானங்கள் ★

✶ இடம்: புனித திருமுழுக்கு அருளப்பர், ஆலய முன்றில்
✶ காலம்: இன்று (18 – 10 – 1994) மாலை 4-00, இரவு 7-30 மணி
✶ நுழைவுச் சீட்டு: மண்டப வாசலில் பெறலாம்.
20/- 50/- 100/- (இருவர் மட்டும்)
(33378)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நிறுவனம் ... லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.